19.06.2025 MCOP No.107/2023

சாட்சி : PW 1 பாலமுருகன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** எனது மனுவில் இந்த விபத்தை ஏற்படுத்திய சிவபாலன் என்பவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தின் ஆர்.சி புக் ஆவணத்தை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்தில் இறந்ததாக சொல்லப்படும் நபர் விபத்திற்கு முன்பு காய்கறி வியாபாரம் செய்ததாக சொல்லப்படுவதற்கு என்னால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1ம் மனுதாரர் வேலாயி என்பவர் விபத்து நடந்த போது சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. விபத்தின் இறந்த எனது தந்தைஆறுமுகம் தலைக்கவசம் அணியவில்லை என்றால் அணிந்திருந்தார். முதல் தகவல் அறிக்கையில் எனது தந்தை ஆறுமுகம் தலைக்கவசம் அணிந்து சென்றதாக எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது தலைக்கவசம் அணியாமல் சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது எனறு சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1 எதிர்மனுதாரிடம் நான் விபத்தில் இழப்பீடு கோருவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** விபத்து சமயத்தில் எனது அப்பாவிற்கு என்ன வயதிற்கும் என்றால் 65 வயதிற்கும். அவர் பிறந்த வருடம் தெரியுமா என்றால் தெரியாது. விபத்து சமயத்தில் எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. அந்த ஓட்டுநர் உரிமத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்னேனா என்றால் தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்த மருத்துவ பில்களான ம.சா.ஆ 7, மற்றும் 8 குறித்து மருத்துவமனையின் நிர்வாகத்தினரிடம் விசாரித்தால் தான் உண்மைத்தன்மை

தெரியவரும் என்று சொன்னால் நிர்வாகத்தினரிடம் விசாரிக்க தயாராக உள்ளேன். விபத்து சமயத்தில் எனது தந்தை மீது மோதிய வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளதால் 1ம் எதிமனுதாரர் பாலிசி நிபந்தனைகளை மீறி நடந்து கொண்டதினால் எங்களுக்கு இழப்பீடு கொடுப்பதற்கு 1ம் எதிர்மனுதாரரே கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

2. எனக்கு திருமணம் ஆகி தனியாக உள்ளேனா என்றால் தனியாக உள்ளேன். 3 ம் மனுதாரருக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். 4ம் மனுதாரர் ராதிகாவிற்கு திருமணம் ஆகி அவர் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை அதிகம் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.